# <u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>

## <u>CC No.50/2017</u>

## <u>DEPOSITION OF WITNESS</u>
## <u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw1 |
| Name | : Sampath |
| Father/Husband's Name | : முங்கிலான் |
| Village | : |
| Taluk | : Perumanur |
| Calling | : |
| Age | : 67 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15.09.2025.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

ஆஜர் எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது சம்மந்தி ஜெகஜோதி மூலமாக தெரியும். ஆஜர் எதிரி எனக்கு நண்பர் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி எவ்வளவு பணம் எனக்கு தர வேண்டுமென்றால் ரூ.14 லட்சம் தர வேண்டும். நான் ரூ.14 லட்சத்தை எந்த முறையில் எதிரியிடம் கொடுத்தேன் என்றால் ரொக்க பணமாக கொடுத்தேன். நான் எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 05.05.2016ம் தேதியில் கொடுத்தேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் ஆங்கிலத்தில் போட தெரியும். புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எனக்கு ஆங்கிலம் தெரியாது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில், பத்தி 3ல் 05.05.2016 ல் பணம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் ரூ.14 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மதசா.ஆ7 ல் 05.05.2016 ல் எனது வங்கி கணக்கில் ரூ.14 லட்சம் வந்ததற்கான எந்த பதிவும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது நிலங்களை விற்று, சேமிப்பாக அந்த தொகை வைத்திருந்தேன். புகாரில், எனது நிலங்களை விற்று பணம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மதசா.ஆ9ல் 17.10.2017ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பினேன். மதசா.ஆ9ல் 15.11.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதசா.ஆ10ல் 16.11.2016 என்று தான் Postal

Receipt ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதசா.ஆ10ல் எதிரி அந்த முகவரியில் இல்லை என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அஞ்சலக உறை எனக்கு எந்த தேதியில் கிடைக்கப்பெற்றது என்றால் 18.11.2016 ம் தேதி கிடைக்கப்பெற்றது. புகாரில் பத்தி 9ல் தபால்காரரை பணம் கொடுத்து சரி செய்து, அந்த இடத்தை விட்டு, சென்று விட்டதாக ஆஜர் எதிரி சொல்ல சொன்னார் என்று குறிப்பிட்டு உள்ளேனா என்றால் குறிப்பிட்டு உள்ளேன். தபால்காரருக்கு எதிராக புகார் ஏதேனும் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. வாங்காத வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கியதாக புகாரில் சொல்கிறேனா என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை எந்த தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் 2017ம் வருடம் தாக்கல் செய்தேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. 24.02.2017 ம் தேதி தான் வழக்கு தாக்கல் செய்ததாக ecourts ல் காட்டப்படுகிறது என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. 28.12.2016ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் அன்று தான் தாக்கல் செய்தேன். மதசா.ஆ1ல் காசோலை எதிரியின் வங்கி கணக்கிற்குரிய காசோலை என்பது எனக்கு தெரியுமா என்றால் எதிரி இந்த காசோலை தான் என்னிடம் கொடுத்தார். மதசா.ஆ2 மற்றும் மதசா.ஆ3 ல் காசோலைகள் எதிரியின் வங்கி கணக்கிற்குரிய காசோலை என்பது எனக்கு தெரியுமா என்றால் அந்த காசோலைகளை தான் என்னிடம் கொடுத்தார். அந்த காசோலைகளில் நான் என்ன எழுதினேன் என்றால் என் பெயரை மட்டும் எழுதினேன். என் முன்னிலையில் காசோலைகளில் கையெழுத்து போட்டாரா என்றால் அவர் ஏற்கனவே கையெழுத்து போட்டு வைத்திருந்தார். மதசா.ஆ3ல் எதிரியின் காசோலை இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரி என்னிடம் கொடுத்த காசோலை. அந்த வங்கி கணக்கு தமீம் அன்சாரி பெயரில் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த காசோலைகளை எவ்வாறு எதிரியிடமிருந்து பெற்றேன் என்றால் எனது சம்மந்தி மூலமாக சென்னைக்கு சென்று பெற்றேன். ஜெகஜோதி என்பவர் எதிரியின் காசோலையை எடுத்து வந்து என்னிடம் கொடுத்து அதில் நான் எனது பெயரை எழுதி வங்கியில் செலுத்தினேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.